1991 சனவரி 25]

குன்றத்தூர் பேரூராட்சியில் அரசு பொது மருத்துவமனை.

*3446—திரு. இ. கோதண்டம் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குன்றத்தூர் பேரூராட்சியில் அரசு பொதுமருத்துவ மனை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது பணி துவக்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

சுயதொழில் தொடங்க குறுகியகால சிறப்புப் பயிற்சி.

*10848—திரு. சி. ரா. முனிரத்தினம்:

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பரா;—

படித்து வேலை வாய்ப்பு இன்றி இருப்போர் விரும்பி சுயதொழில் துவங்க வேலை வாய்ப்பு அலுவலகங்களை அணுகினால் குறுகிய கால சிறப்புப் பயிற்சி தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இயலாது.

திரு. சி. ரா. முனிரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படித்த இளைஞர்களுக்கு வேலையில்லாத காரணத்தால் சுயநிதிக் கடன்கள் வழங்கங்கூடிய அரசின் திட்டத்தின்கீழ் அதை முறையாக அவர்கள் பயன்படுத்த முடியாத காரணத்தால், வேலை வாய்ப்பு அலுவலகங்கள் மூலமாக அவர்களுக்குக் குறுகிய காலப்பயிற்சி அளித்தால் நல்லதாக இருக்கும் என்பதை அரசு அறியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புற வேலைகளில் இளைஞர்களுக்கு ஊரக இளைஞர் சுய வேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டத்தின் கீழ் அரசு தொழில் பயிற்சி நிலையங்களில் 25 தொழில்

பிரிவுகளில் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இது முடிந்தவுடன் தாங்களாகவே சுய வேலைவாய்ப்புகளை ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் தொடங்கும் வகையில் ரூ. 10,000 பெறுமானமுள்ள இயந்திரத் தளவாடங்களைக் கொள்முதல் செய்வதற்கு, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலம் திருப்பிச் செலுத்தும் வகையில் கடன் தொகை 25 சதவீத மானியத்துடன் வழங்கப்படுகிறது. மேலும் இங்கே சுய தொழில் தொடங்க கடன்வசதிகள் நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகளால் அளிக்கப்படுகின்றன. வேலூரிலும், கோவையிலும் இதற்கென்று தனியாக வேலை வாய்ப்பு அலுவலகங்கள் இருக்கின்றன. அங்கே அவர்கள் அந்தப் பட்டத்தைப் பெற்ற பிறகு அவர்களுக்குக் கடன் வாங்கி உதவுவதற்காக அந்த வேலை வாய்ப்பு அலுவலகங்கள் மூலம் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து கடன் வாங்கித் தரப்படுகிறது. தொழில் பயிற்சி நிலையங்களில் கைவினைஞர் பயிற்சி சான்று பெற்ற மனுதாரர்களுக்கு சுயமாக தொழில் தொடங்க அதிகபட்ச மானியத் தொகையாக ரூ. 2,000 வழங்கப்படுகிறது. அதிகபட்சமாக ரூ. 10,000 கடன் வாங்கித் தரப்படுகிறது. இப்போதுதான் இந்தத் துறை இதுபோன்ற செயல்களையெல்லாம் செய்து கொண்டிருக்கிறது. ஒவ்வொரு வேலை வாய்ப்பு அலுவலகத்தின் மூலமாக அவர்களுக்குப் பயிற்சி தருவதற்கு இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

9-50 மணி

திரு. சி. ரா. முனிரத்தினம்: தலைவர் அவர்களே, படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கிற இளைஞர்களுக்கு சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் ரூ. 35,000 இந்த அரசின் மூலமாக வழங்கக்கூடிய அந்த உதவியை சற்று உயர்த்தி ரூ. 50,000-மாக வழங்கினால் அந்தத் தொழில் தொடங்க ஏதுவாக, உதவியாக இருக்கும். அதை அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய கருத்தை ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளலாம்.

திரு. மு. க. ஸ்டாலின்: தலைவர் அவர்களே, படித்து வேலை வாய்ப்பு இல்லாமல் இருப்பவர்கள் எத்தனை பேர்? சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் பயன் அடைந்தோர் எத்தனை பேர் என்பதை அரசு அறிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு வரையில் வேலை வாய்ப்பு அலுவலகங்களில் 25 லட்சம் பேர்களுக்கு மேல் பதிவு செய்து வேலையில்லாமல் இருக்கிறார்கள். சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், வேலூர், கோவையில் வேலை வாய்ப்பு அலுவலகங்களை

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அணுகியவர்களுக்கு 3,995 பேர்களுக்கு தொழில் தொடங்குவதற்கு 4.53 கோடி ரூபாய் கடனுதவியாகவும், அதிலே 1.62 கோடி ரூபாய் மானியமாகவும் இந்தத் துறை மூலமாக வாங்கித் தரப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். அப்துல் லத்தீப் : தலைவர் அவர்களே, இந்தத் துறையில் மொத்தமாக இதுவரையில் பெற்ற விண்ணப்பங்கள் எத்தனை ? எத்தனை விண்ணப்பதாரர்கள் நிவாரணம் பெற்று இருக்கிறார்கள் ? மாவட்ட வாரியாக ஏதாவது அதிலே குறியீடு கொடுக்கப்பட்டிருக்கிறதா ? அந்த விண்ணப்பங்களில் ஒரு மாவட்டத்திற்கு இவ்வளவு அளிக்க வேண்டுமென்று அதில் ஏதாவது குறியீடு இருக்கும். (குறுக்கீடு) அலாட்மெண்ட் என்றால்—Prescribed allotment for every district. I would like to know whether they have prescribed such allotment for every district, If so, what is the number for each district? How many applications have been fully disposed of? What is the number of beneficiaries in each district?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் கேட்ட கேள்விக்கு சரியான விளக்கங்கள் இப்போது என்னிடம் இல்லை. தனியாக ஒரு கேள்வி கேட்பார்களானால், அதற்கான முழு விளக்கமும் அளிக்கப்படும். இருந்தாலும் வேலை வாய்ப்பு அலுவலகங்கள் மூலம் பதிவு செய்து வேலை இல்லாமல் இருக்கிற பட்டதாரிகள் எவ்வளவு பேர் இருக்கிறார்களோ அவ்வளவு பேர்களுக்கு மூன்றாண்டுகளுக்கு இந்த அரசு மூலமாக ஒரு ஆண்டிற்கு ஏழு கோடி ரூபாய்க்கு மேலாக மானியத் தொகை வழங்கப்பட்டிருக்கிறது. சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் எவ்வளவு பேர் மனு செய்திருக்கிறார்கள் என்ற விவரத்திற்குத் தனியாகக் கேள்வி கேட்டால் பதில் அளிக்கப்படும்.

TRUTH ALONE TRIUMPHS

பெரியார் பெயரில் கோட்டம் அமைத்தல்.

* 11646—திரு. எம். முத்தையன் :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சென்னையில் வள்ளுவர் கோட்டம் அமைந்துள்ளது போல், சமுதாய சீர்திருத்தச் செம்மல் பெரியார் பெயரில் ஒரு கோட்டம் அமைக்க அரசு முன்வருமா ?